SAS SCHOOL OF ARTS AND SCIENCE

ISO 21001:2018 CERTIFIED

VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION
DEEMED TO BE UNIVERSITY
(Declared Under Section 3 of the UGC Act, 1956)

# திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் முத்தமிழாயம் வழங்கும் இலக்கியப் பதாகை (பறப்பு-13)

'அட்சயப் பாத்திரம்' பசிப்பிணி போக்குவது, அருந்தமிழ் நூல்கள் வாழ்வின் நலன் நல்குவது. அவ்வருந்தமிழ் நூலான திருக்குறளை, வாழ்வின் பாதையாக கண்டு புகழெனும் உச்சத்தைத் தொட்டவர் திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார். அவர் வாழ்வைப் போற்றும் வண்ணம் விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்திற்குட்பட்ட ஆறுபடை வீடு தொழில்நுட்ப வளாகம், கலை மற்றும் அறிவியல் புலம், தமிழ்த்துறை சார்பில் மார்ச் -12ஆம் தேதி இலக்கியப் பதாகை பறப்பு-13 நிகழ்வு நடந்தேறியது.

தமது வாழ்த்துக்களையும், ஆசிகளையும், ஆதரவையும் மேதகு டாக்டர் அ.ச.கணேசன் (வேந்தர்), டாக்டர் அனுராதா கணேசன் (இயக்குநர்) அவர்கள் அளித்தனர்.

நிகழ்விற்கு தலைமை வகித்த கலை மற்றும் அறிவியல் புலத்தின் இயக்குநர் முனைவர் இரா.ஷண்முகவள்ளி அவர்கள் இல்லறப் பண்பாட்டிற்கு நம்மை அழைத்துச்செல்லும் சங்க இலக்கியத்தைச் சுட்டி, அதனுள் தூய்மையான இரண்டறக் கலந்த காதல் எனும் அன்பு, பண்பாட்டை ''யாயும் ஞாயும் யாராகியரோ'' எனும் பாடலை நற்பாங்குற எடுத்துரைத்து நிகழ்வு இனிதே நடைபெற வாழ்த்துரைத்தார்.

முத்தமிழை மீட்டுருவாக்கம் செய்யும் வண்ணம் **'பண்பாட்டு நோக்கில் சங்க இலக்கியம்'** என்ற தலைப்பில் **பேராசிரியர் சையத் அகமது கபீர்** அவர்கள் உரையாற்றினார். இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள் எவ்வாறு உள்ளது என்பதை சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியங்கள் வரை தொட்டு அதன்வழி மாணவர்களின் படைப்பாக்கச் சிந்தனையைத் தூண்டினார். படைப்பை பல்வேறு கோணங்களில் அணுகும் இளைய தலைமுறைக் கவிஞர் உட்பட படைப்பாளர்களையும் படைப்புகளையும் அழகுற எடுத்துரைத்தார். அன்பு, காதல், குடும்பம், அறம் எனும் பார்வையில் தமிழ்ப் பண்பாடு இன்னும் வளர்ந்து கொண்டு இருப்பதை மாணவர்களிடம் எடுத்துரைத்தது இரசித்து கவனிக்கும் வகையில் அமைந்தது.

அறிமுக உரையில் முத்தமிழாய விழாவின் சிறப்பையும், சிறப்பு விருந்தினரையும் அவரது பல்வேறு விதமான சிறப்புகளையும் எடுத்துரைத்து, மாணவர்களையும் தமிழார்வப் படுத்தினார் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் ப.ஜெயபாரதி அவர்கள்.

விழா – தொகுத்து வழங்குதலை முனைவர் ந.சுரேஷ் அவர்களும், வரவேற்புரை திரு.சு.பழனியப்பா அவர்களும், நன்றியுரை கணினி அறிவியல் துறைப் பேராசிரியர் இராமசுப்பிரமணியம் அவர்கள் கூற, நிறைவாக நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவுற்றது.


9:52 AM
91%
12 March 2021
11:15 | Zoom

SAS
SCHOOL OF ARTS AND SCIENCE

ISO 21001:2018 CERTIFIED

VINAYAKA MISSION'S
RESEARCH FOUNDATION
DEEMED TO BE UNIVERSITY
(Declared Under Section 3 of the UGC Act, 1956)



SAS
SCHOOL OF ARTS AND SCIENCE

VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION
DEEMED TO BE UNIVERSITY
(Declared Under Section 3 of the UGC Act, 1956)

ISO 21001:2018 CERTIFIED

**விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்**
நிகர் நிலைப் பல்கலைக்கழகம்
**கலை மற்றும் அறிவியல் புலம்**
ஆறுபடை வீடு தொழில்நுட்ப வளாகம்

NAAC
NATIONAL ASSESSMENT AND ACCREDITATION COUNCIL

# திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் மூத்தமிழாயம்

## தமிழ்த்துறை: இலக்கியப் பதாகை
## பறப்பு: 13



அறிமுக உரை : முனைவர் ப. ஜெயபாரதி அவர்கள்

சிறப்புரை : பேராசிரியர் சையத் அகமது கபீர்,
காதிர் முகைதீன் கல்லூரி,
அதிரம்பட்டினம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர்

தலைப்பு : ‘பண்பாட்டு நோக்கில் சங்க இலக்கியம்‘

தலைமை : முனைவர். இரா.சண்முகவள்ளி அவர்கள்
இயக்குநர், கலை மற்றும் அறிவியல் புலம்

***Zoom Meeting ID :***
***850 6371 2028***
***Password : SAS2021***



**ஆசிகளும் வாழ்த்துகளும்**

**மேதகு டாக்டர். அ. ச. கணேசன் அவர்கள்,**
வேந்தர்,
விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்,
நிகர்நிலைப் பல்கலைக்கழகம்

**டாக்டர். அனுராதா கணேசன் அவர்கள்,**
இயக்குநர்,
விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்,
நிகர்நிலைப் பல்கலைக்கழகம்

அமைப்புக்குழு
திரு. அ.முத்துக்குமார்
முனைவர் ந.சுரேஷ்
திரு.சு.பழனியப்பா

**நேரம் : காலை 10.00 மணி** **நாள் : 12.03.2021 வெள்ளிக்கிழமை**